2nd July 1962]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : இப்பொழுது உயர்நிலைப் பள்ளி வரையிலும் இலவசப் படிப்பு இருந்து வருகிறது. அதற்கு 1,500 ரூபாய் வரையிலும் வருமான கட்டம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது போதுமானதாக இல்லாத காரணத்தால், அதை 1,800 ரூபாயாக உயர்த்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது, இரண்டு நாட்களுக்கு முன்புதான் வரவு செலவுத் திட்டத்திலே 1,500 ரூபாய் வரையில் உயர்த்தியிருக்கிறோம். பின்னர் கல்வி பற்றிய விவாதம் வரும்பொழுது இதைப்பற்றி பேசலாம். இப்பொழுது, உடனடியாக 2,000 ரூபாய் வரையிலும் உயர்த்துவதாக உத்தேசம் இல்லை.

Sugarcane cess (refund)

* 80 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government of India have requested this Government to refund the cane cess collected from sugar factories for sugar exported?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

திரு. வை. சங்கரன் : ஏற்கெனவே வாங்கியிருக்கும்படியான ரிபேட்டை திருப்பிக்கொடுப்பதற்கு யோசனை கூறியிருக்கும் பொழுது மேற்கொண்டு ஒரு டன்னுக்கு 5 ரூபாய் என்று போடப் பட்டிருக்கிறது. அதனுடைய விளைவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது மேற்கொண்டு ஒரு டன்னுக்கு ரூபாய் 5 போட்டிருப்பதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. இதர மாகாணங்களைவிட இங்கே சர்க்கரை பாக்டரிகள் லாபத்தில் ஓடுகின்றன. ஏற்கெனவே குறைவாக விதித்திருக் கிறோம். அதைப் பார்த்துத்தான் அரசாங்கம் முடிவுக்கு வந்திருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த கரும்பு செஸ் சம்பந்தமாக ரீபண்டு கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து வந்ததற்கு நம்முடைய சென்னை சர்க்கார் அதை மறுத்ததாகச் சொல்லப்பட்டது. அப்படி இதைத் திருப்பிக் கொடுக்க மாட்டோம் என்று சொன்னதற்கு காரணங்கள் என்ன என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : கரும்பு செஸ்ஸைக் கொண்டு இன்னும் கரும்பு உற்பத்தி செய்கிற பகுதிகளில் டெவலப்மென்ட் வேலைகள் செய்யவேண்டியிருக்கிறது. திருப்பிக் கொடுத்தால் 2 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கும். அதைக்கொண்டு இந்த வேலைகள் செய்வதால் திருப்பிக்கொடுக்க முடியாது என்று மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம்.

[2nd July 1962

திரு. அ. சேனுபதி கவுண்டர் : இந்த செஸ் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே லாபம் கிடையாது. ஆகவே அவைகளுக்கு இந்த வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் லாபம் இருக்கிறதா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அதைப் பற்றி பரிசீலனை செய்யவேண்டும்.

திரு. மு. சண்முகம் : இந்த செஸ் தொகை கரும்பு விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டதா, அல்லது ஆலை முதலாளிகளின் நிதியிலிருந்து வசூலிக்கப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த செஸ் ஒரு டன்னுக்கு 2 ரூபாய் என்று வசூலிக்கப்பட்டது. ஆலையிலிருந்து வசூலிக்கப்பட்டதா அல்லது ஏற்றுமதி செய்கிறவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டதா என்ற தகவல் தற்சமயம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

ராசிபுரம் குடிநீர் வழங்கும் திட்டம்

* 81 கேள்வி.—திரு. நா. பா. செங்கோட்டுவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராசிபுரம் நகரத்திற்கு பனமரத்துப்பட்டி தண்ணீரை உபயோகித்துக்கொள்ள அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறதா ?

(இ) அப்படியானல், எப்போது வேலை துவங்கப்படும் ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) The Government have not yet decided upon the source from which water-supply should be given to Rasipuram. The Chief Engineer, Public Works Department (General), has suggested the Panamarathupatti source, subject to certain conditions and submitted outline proposals and estimates for the scheme. The matter is under examination.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : ராசிபுரம் நகரசபையிலிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்ததா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ராசிபுரத்திலிருந்து தகவல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ராசிபுரத்திலே தண்ணீர்ப் பஞ்சம் ஒவ்வொரு ஆண்டும் இருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே ராசிபுரத்திற்காக ஒரு தண்ணீர்த் திட்டத்தை சர்க்கார் தனியாகப் பரிசீலித்து, ஏதாகிலும் ஒரு நிரந்தரமான முடிவுக்கு வருவார்களா ? அப்படி தண்ணீர் கொடுக்க முடியவில்லை என்ருல், குழாய்க் கிணறுகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.